சுருக்கம்

பணியாளரமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – வேலூர் கோட்டம் – திரு கு.தினகரன் என்பவர் கருணையடிப்படையில் 30.05.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண். 112

நாள்: 17.07.2020
சார்வரி, ஆடி–2,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டன:

1. இணை ஆணையர் (வணிகவரி), வேலூர் கோட்டம் அவர்களின் செயல்முறைகள் எண்.1641/2015/ஆ2, நாள் 17.05.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்3/6489/ 2020, நாள் 21.02.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், வேலூர் கோட்டம், திருவண்ணாமலை துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகத்தில், உதவியாளராகப் பணிபுரிந்த போது 14.04.2010 அன்று பணியிடை மரணமடைந்த திரு ர.குப்புசாமி என்பவரின் மனைவி திருமதி க.மணிமேகலை என்பவர் தமது மகன் திரு கு.தினகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 12.04.2013 அன்று விண்ணபித்துள்ளார். திரு கு.தினகரன், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட வேலூர் கோட்டம் இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் வந்தவாசி வணிகவரி அலுவலர் அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 30.05.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு கு.தினகரன் என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 30.05.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டதில், திரு கு.தினகரன், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள்

சரிபார்க்கப்பட்டதில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வணிகவரித் துறையில் வேலூர் கோட்டம், திருவண்ணாமலை துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகத்தில், உதவியாளராகப் பணிபுரிந்த போது 14.04.2010 அன்று பணியிடை மரணமடைந்த திரு ர.குப்புசாமி என்பவரது மகன் திரு கு. தினகரன் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வணிகவரித் துறையில், வந்தவாசி வணிகவரி அலுவலர் அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 30.05.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.9151/ ட்டி1/2020-1, நாள் 04.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.15982/ஜி2/2020-1, நாள் 13.07.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

திரு கு. தினகரன், இளநிலை உதவியாளர்,
வணிகவரி அலுவலர் அலுவலகம், வந்தவாசி, வேலூர் கோட்டம்,
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (வணிகவரி), வேலூர் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை வழியாக).
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி-1) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/7/20

பிரிவு அலுவலர்
21/7/20